# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **இந்துசமயம்** **Hinduism** | **Three Hours** / **Gr -12 (2022)** | **42** | **T** | **I,II** |

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

## பகுதி I

- ***1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று எதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.***

01) 1. மோதகம் 2. அங்குசம் 3. அமுதகலசம் 4. எழுத்தாணி 5. சூலம்

02) 1. நாலடியார் 2. சிறுபஞ்சமூலம் 3. ஏலாதி 4. திரிகடுகம் 5. நெடுநெல்வாடை

03) 1. குணபரன் 2. சித்திரகாரபுலி 3. மத்தவிலாசன் 4. சங்கீர்ணஜாதி 5. 3ம் சிம்மவர்மன்

04) 1. தனவிகைப் புராணம் 2. அதியமாலை 3. தசகாரியம் 4. நமசிவாயமாலை 5. நிட்டை விளக்கம்

05) 1. திருப்புகழ் 2. கந்தரலங்காரம் 3. திருமுருகாற்றுப்படை 4. கந்தரனுபூதி 5. வேல்விருத்தம்

- ***06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.***

06) 1. சங்ககாலம் - ஐவகைப்பண்
2. சங்கமருவிய காலம் - தேவாரநாயகம்
3. பல்லவர் காலம் - சங்கீரணசாதி
4. சோழர் காலம் - வாச்சியமாராயன்
5. நாயக்கர்காலம் - இசைத்தூண்கள்

07) 1. மரபுவழிச்சாதனம் - முரசறைதல்
2. அச்சுக்கலை - ஓலைச்சுவடிகள்
3. சொல்வழித்தொடர்பு - மகாநாடுகள்
4. வெளிப்புறச் சாதனங்கள் - அறிவிப்புப்பலகை
5. தகவல் தொழில்நுட்பம் - ஒலிநாடா

08) 1. கந்தபுராணம் - கச்சியப்பர்
2. பெரியபுராணம் - சேக்கிழார்
3. திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்
4. கோயிற் புராணம் - மறைஞானசம்பந்தர்
5. திருவாதவூரடிகள் புராணம் - கடவுள் மாமுனிவர்

09) 1. தீதும்நன்றும் பிறர்தரவரா - பரிபாடல்
2. யாழும் குழலும் சீரும்மிடமும் - சிலப்பதிகாரம்
3. தோற்றம் துடியதனில்தோற்றம் திதி - உண்மை விளக்கம்
4. பாதாங்கும் கோயிலும் பொன் மண்டபமும் - தட்சணகைலாய புராணம்
5. கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை - தொல்காப்பியம்

10) 1. பிரமம்சத்தியமானது - சாந்தோக்கிய உபநிடதம்
2. அனைத்தும் பிரமம் - முண்டக உபநிடதம்
3. உலகம் எதனால் தோன்றி, இயங்கி எதில் ஒடுங்குகின்றதோ அது பிரமம் - கடோ உபநிடதம்
4. உயர்பிரமம் ஒன்றே உண்மை - பிரசன்ன உபநிடதம்
5. பிரமம் கிரண்டற்றது - சாந்தோக்கிய உபநிடதம்

- ***11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.***

**11)**

| அ | ஆ |
|---|---|
| 1. கூத்துக்கலை | A கொம்புமுறி |
| 2. கோலாட்டம் | B சுமை தூக்குதல் |
| 3. காவடி | C ஓணம் பண்டிகை |
| 4. கரகம் | D வட்டக்களரி |
| 5. வசந்தன் கூத்து | E செம்பாட்டம் |

1. CDBEA 2. DCBEA 3. BEACD 4. DCBAE 5. DCABE

**12)**

| அ | ஆ |
|---|---|
| 1. வருணன் | A அக்கினி |
| 2. தேவதூதன் | B வேட்டல் |
| 3. அந்தணன் | C மகவான் |
| 4. இந்திரன் | D சவித்திரு |
| 5. சூரியன் | E ரிதஷ்யகோபா |

1. EABDC 2. EACBD 3. ABECD 4. EABCD 5. CDABE

**13)**

| அ | ஆ |
|---|---|
| 1. ஜலசயனம் | A தஞ்சைப் பெருங்கோயில் |
| 2. தென்திசை மேரு | B காஞ்சிகைலாசநாதர் கோயில் |
| 3. பெரிய கறறளி | C மாமல்லபுரம் |
| 4. ஜராவதேஸ்வரம் | D தர்மராஸரதம் |
| 5. சிற்பக் கலைக் களஞ்சியம் | E இராஜஇராஜேஸ்வரம் |

1. CABED 2. CAEDB 3. CAEBD 4. ADBCE 5. CADBE

**14)**

| அ | ஆ |
|---|---|
| 1. தாழிக்குமரன் | A வேல் |
| 2. காத்தல் | B வள்ளி |
| 3. அழித்தல் | C தெய்வயானை |
| 4. மறைத்தல் | D மயில் |
| 5. அருளல் | E சேவல்கொடி |

1. EDBAC 2. BCADE 3. EDABC 4. EDCAB 5. BCDA

**15)**

| அ | ஆ |
|---|---|
| 6. படைத்தல் | A வேல் |
| 7. காத்தல் | B வள்ளி |
| 8. அழித்தல் | C தெய்வயானை |
| 9. மறைத்தல் | D மயில் |
| 10. அருளல் | E சேவல்கொடி |

1. EDBAC 2. BCADE 3. EDABC 4. EDCAB 5. BCDAE

- **மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 16 – 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.**

| A<br>தில்லைக்காட்சி | B<br>மானசாரம் | C<br>நமசிவாய மூர்த்திகள் | D<br>24000 சுலோகம் | E<br>சகோதரத்துவம் |
|---|---|---|---|---|
| F<br>சம்பந்தன் பத்திரிகை வெளியிடல் | G<br>திரிபுராந்தகர் | H<br>ஆகமம் | I<br>கனாதன தர்மம் | J<br>வான்மீகி |

*16)* இந்து விக்கிரகக் கலையுடன் தொடர்புடைய விடயங்கள் அடங்கிய தொகுதி.
1. AG 2. BH 3. DF 4.CG 5. DG

*17)* நாயக்கால சைவ ஆதீனங்களுடன் தொடர்புடைய தொகுதி.
1. CF 2. DF 3. HE 4. CH 5. AE

*18)* சோழர் கால ஓவியக் கலையுடன் தொடர்புடைய தொகுதி.
1. BG 2. AI 3. GH 4. AG 5. DA

*19)* இந்துசமயத்தின் சிறப்பம்சத்துடன் தொடர்புடைய தொகுதி.
1. EF 2. BI 3. EI 4. AE 5. HJ

*20)* இராமாயணத்துடன் தொடர்புடைய தொகுதி.
1. AJ 2. DI 3. AB 4. CJ 5. DJ

- ***21 தொடக்கம் 22 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தருக.***

*21)* குற்ற நிவிர்த்தியின் பொருட்டு ஆலயங்களில் நிகழும் கிரியை
*1.* காமிக கிரியை *2.* பிராயச்சித்தம் *3.* பிரதிஷ்டை *4.* கர்சனம் *5.* உற்சவம்

*22)* மொகஞ்சதாரோ தற்போது அமைந்துள்ள மாநிலம்
*1.* பஞ்சாப்மாநிலம் *2.* மேற்கு பஞ்சாப் மாநிலம் *3.* குஜராத் மாநிலம்
*4.* பாகிஸ்தான் *5.* வங்காளம்

- ***23 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.***

*23)* திருநாவுக்கரசு நாயனார்.
*1.* சமணரகளால் துன்புறுத்தப்பட்டவர்.
*2.* ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என வாழ்ந்தவர்.
*3.* இறைவனிடம் இருந்து பொதிச்சோறு பெற்றவர்.
*4.* பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீக்கியவர்.
*5.* தாண்டக வேந்தர் என சிறப்பிக்கப்படடவர்.

*24)* கடையிற் சுவாமிகள்
*1.* முத்தியானந்தர் என்ற தீட்சா நாமம் கொண்டவர்.
*2.* ஸ்ரீநரசிங்க பாரதியின் சீடராவர்
*3.* காரைதீவில் சமாதியடைந்தவர்.
*4.* நீதிபதியாக கடமையாற்றியவர்.
*5.* புயலில் தத்தளித்த மீனவரைக் காப்பற்றியவர்.

*25)* விபுலானந்தர்
*1.* இளமைப் பெயர ஆறுமுகம்
*2.* ஏழை மாணவர் வாழ்விற்கு ஒளியூட்டியவர்.
*3.* ''கலைச் சொல்'' அகராதியை உருவாக்கியவர்.
*4.* நடாக நூலாகிய மதங்க சூளாமணியை இயற்றியவர்.
*5.* இசை நூலான யாழ் நூலை இயற்றியவர்.

(25x4=100 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

*01)* இந்து நாகரிக வரலாற்றில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை கீழ்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) வழிபாட்டுமுறை ஆ) தத்துவ சிந்தனை இ) ஒழுக்கம் ஈ) கடவுட் கோட்பாடு

(5x4= 20 புள்ளிகள்)

*02)* மகாபாரதம் பிரதிபலிக்கும் சமய பண்பாட்டு அம்சங்களை மேல்வரும் விடயங்களில் விவரிக்குக.

அ) சமயநெறிகள் ஆ) தர்மசிந்தனைகள் இ) இலக்கிய மரபு ஈ) சமுதாய வழமைகள்

(5x4 = 20 புள்ளிகள்)

*03)* பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு வளர்ச்சியினை மேல் வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.

அ) பக்தி இயக்கம் ஆ) கட்டிட சிற்பகலைகள்

இ) சைவவைணவ இலக்கியம் ஈ) ஓவிய நடகக் கலைகள் (5x4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

*04)* ''வைணவ பக்தி இயக்கத்தை வளர்ப்பதில் நம்மாழ்வாரின் பணி மகத்தானது''

அ) ''ஆழ்வார்கள்'' என்ற சொல்லின் விளக்கமும் முக்கியமான ஆழ்வார்கள் நால்வரின் பெயர் தருக?

ஆ) நம்மாழ்வாரின் வாழ்வும் பின்னணியும்

இ) நம்மாழ்வாரின் பாடல்களும் உட்பொருளும்

ஈ) நம்மாழ்வார் பாடல்களில் காணப்படும் பிரமசூத்திரம் பற்றிய கருத்துக்கள்

(5x4 = 20 புள்ளிகள்)

*05)* ''நாட்டார் தெய்வ வழிபாட்டில் நாட்டார் கலைகள் சிறப்பிடம் பெறுகின்றன்.

அ) நாட்டார் கலை என்பதன் விளக்கமும், அதன் வகைகளையும் குறிப்பிடுக.

ஆ) காவடியின் அமைப்பு பற்றித் தருக?

இ) காவடி குறிக்கும் தத்துவங்களைக் குறிப்பிடுக. (5x4 = 20 புள்ளிகள்)

*06)* இலங்கையில் இந்து சமய வரலாற்றில் அனுராதபுர காலம் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளைக் கருத்திற் கொண்டு ஆராய்க.

அ) சான்றாதாரங்கள் ஆ) காலச் சூழல் இ) கோயில்கள் ஈ) மன்னர்களின் பணி

(5x4 = 20 புள்ளிகள்)

*07)* பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்தை வளம்பெறச் செய்வதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

அ) சமயப் பணிகள் ஆ) கல்விப் பணிகள்

இ) சமூகப் பணிகள் ஈ) பதிப்பாசிரியர் பணிகள்

( 5x4 = 20 புள்ளிகள்)

*08)* இந்துப் பண்பாட்டில் திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு இசைக் கலை வளர்ந்தவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)